# சிலப்பதிகாரத்தில் நம்பிக்கைகள்

தே. ராஜசீலி
தமிழ்த்துறை, ஜெ.அ. மகளிர் கல்லூரி, பெரியகுளம்.

## முன்னுரை

நம்பிக்கை என்பது மனிதனது மூன்றாவது கை என்று கூறுவர். நம்பிக்கை என்ற தண்டவாளம் இல்லாவிட்டால் மனிதகுலம் என்னும் இரயில் பயணம் செய்ய முடியாது. கிராமப்புறத்து நம்பிக்கைகள் வலுவானவை.

நம்பிக்கை என்பது ஒன்றின் உண்மையை ஏற்றுக் கொள்வதாகும். நம்பிக்கை என்பது அடிப்படை மனிதனின் அகமனம் என்பர். இந்நம்பிக்கைகளை சிலப்பதிகாரத்தில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்று ஆராய்வதே முக்கிய நோக்கமாகும்.

## சிலம்பு – சொற்பொருள் விளக்கம்

சிலம்பு என்ற சொல் வினையாகவும், பெயராகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலம்பு, சிலம்பம், சிலம்பல் போன்ற வடிவங்கள் சங்க இலக்கியத்தில் காணப்பெறுகின்றன.

சிலம்பு என்ற சொல்லை ஒலி, மகளிர் காலணி வகை, பூசாரிகளின் கைச்சிலம்பு, மாலை என்ற பொருளில் வழங்குவர்.

## நம்பிக்கை

நம்பிக்கை ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவி வருகின்றது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பலவித நம்பிக்கைகள் இருப்பதைக் காண்கிறோம்.

"நம்பினார்க் கெடுவதில்லை இது நான்குமறை தீர்ப்பு"[1]

இப்பாடல் மூலம் சி.சேதுராமன் அவர்கள் நம்பிக்கை பற்றிக் கூறியுள்ளார்

## கண் துடித்தல் பற்றிய நம்பிக்கை

ஆடவர்களுக்கு இடது கண் துடித்தால் தீமை என்றும், வலது கண் துடித்தால் நன்மை என்றும், பெண்களுக்கு வலது கண் துடித்தால் தீமைக்கு அறிகுறி என்றும், இடது கண் துடித்தால் நன்மை என்றும் கூறுவர்.



Vol.3, No.2, June 2016 ISSN: 2347-9868

Scanned by CamScanner

**"கண்ணகி கருங்கண்ணும் மாதவி செங்கண்ணும்**
**உள்நிறை கரந்து அகத்து ஒளித்து நீர் வுகுத்தன"[2]**

கண்ணகியின் கருமையான கண்ணும், மாதவியின் செந்நிறமுள்ள கண்ணும் தங்கள் உள்ளத்திலிருப்பதை ஒளித்து மறைத்து வைத்திருப்பதனால் நீரைச் சிந்தின. இந்திர விழாவின் போது கண்ணகியின் இடது கண்ணும், மாதவியின் வலது கண்ணும் துடித்தன. இவ்வடிகள் மூலம் மாதவிக்குத் தீமை வருவதையும், கண்ணகிக்கு நன்மை வருவதையும் காட்டியுள்ளார் ஆசிரியர்.

**சகுனம் பற்றிய நம்பிக்கை**

சகுனம் பார்ப்பது உலகமெங்கிலும் பரவலாகக் காணப்படுகின்ற ஒரு நம்பிக்கையாகும். மனிதர்களின் செயல்பாடுகள், பறவை, விலங்குகளின் செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டு சகுனம் பார்க்கப்படுகின்றது.

**"நற்செயலையும் நற்பயனையும்**
**அறிவிக்கும் குறியினை நல் நிமித்தம்**
**என்றும், தீச்செயலையும் தீமையையும்**
**அறிவிக்கும் குறியினைத் தீ நிமித்தம்"[3]**

என்றும் வகைப்படுத்தலாம் இதனையே நாட்டுப்புற வழக்கில் நல்ல சகுனம் என்றும் கெட்ட சகுனம் என்றும் கூறுவர் என சக்திவேல் அவர்கள் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் சகுனம் பார்க்கும் வழக்கம் காணப்படுகிறது. கோவலன், கண்ணகியின் சிலம்பை எடுத்துக் கொண்டு மதுரையில் வீதியில் நடக்கும்போது. திமிலையுடைய ஒரு பெரிய காளை கோவலனை எதிர்த்துப் பாய வந்தது. இதன் வழியாக தீங்கு வரும் என்று நம்பினர்.

**"இமில்ஏறு எதிர்ந்தது இழுக்கு என அறியான்"[4]**

என்று கூறுகிறார் ஆசிரியர்.

ஆய்ச்சியர் குரவையில், குடத்திலே உறையிட்ட பால் உறையாமல் இருத்தல் காளையின் கண்ணில் நீர் வடிதல், உறியிலே வைத்த வெண்ணெய் உருகாமலிருத்தல், ஆட்டுக் குட்டிகள் துள்ளி விளையாடாமல் சோர்ந்து கிடத்தல், பெரிய மணிகள் தாமே அறுந்து விழுதல், பசுமந்தை பயந்து கத்துதல் இவை எல்லாம் பின்வரும் கேட்டை முன் உணர்த்தும். கெட்ட சகுனங்கள் என்று ஆயர்கள் நம்பினர்.



Vol.3, No.2, June 2016 ISSN: 2347-9868

Scanned by CamScanner

**கனவு பற்றிய நம்பிக்கைகள்**

காப்பிய உத்தியாகக் கையாளப்படும் கனவு சிலம்பில் கதைத் திருப்புமுனைக்குத் துணைபுரிகிறது.

**கண்ணகி கண்ட கனவு பற்றிய நம்பிக்கை**

காப்பியத் தலைவியான கண்ணகி தன் கனவின் மூலம் வெளியிப்பட்ட நம்பிக்கையினைக் கூறும்போது,

**"கடுக்கும் என் நெஞ்சக், கனவினால் என் கை**
**பிடித்தனன் போய் ஓர் பெரும் பதியுள் பட்டேன்"[5]**

இனி என் கணவனை நான் அடையமாட்டேன். எனவே என் கனவில் கோவலன் என் கையைப் பற்றிக்கொண்டு அவனுடன் அழைத்துச் சென்று பெரிய நகரினுள்ளே சென்றபோது என் மீது பொய்த் தேள் இட்டது போல அவருக்குத் தீங்கு நேர்ந்தது கண்டு அஞ்சினேன். நானும் காவலனோடு முன்சென்று வழக்கு உரைத்தேன். என் கனவில் குற்றத்தை பெற்று என்னோடும் என் கணவனும் குற்றமற்று நற்பேறு பெற்றது கனவிலே தோன்றியது. எனவே கனவு பலிக்கும் என்ற நம்பிக்கை உறுதியாகின்றது.

**பாண்டிமா தேவி கண்ட கனவு பற்றிய நம்பிக்கை**

வீரமறவர்கள் பலியிடும் செய்தியினைக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

**"கனவில் இரும்பைக் கண்டால்**
**துன்பங்கள் நேரும்"[6]**

என்று சு.சக்திவேல் அவர்களது நூலில் கனவு பற்றிய நம்பிக்கையைக் கூறியுள்ளார்.

**"கடைமணி யின்குரல் காண்பென் - காண் எல்லால**
**திசையிரு நான்கும் அதிர்ந்திடும் அன்றி"[7]**

பாண்டிமா தேவியின் கனவில் மன்னனின் செங்கோல் வீழ்ந்தது. கடைவாயில் மணி ஒலிக்க, சூரியனை இருள் விழுங்கவும், இரவில் வானவில் தோன்றியது என, தோழியிடம் கூறினாள். இந்தக் கனவு பலித்துவிடுமோ என்ற அச்சம் கொண்டிருந்தாள். அச்செயல்கள் அப்படியே நடந்தன.

**கோவலன் கண்ட கனவு பற்றிய நம்பிக்கை**

தமிழ் மக்களுக்குக் கனவிலே நம்பிக்கை உண்டு. பின்னால் நிகழப் போவதை முன்னால் அறிவிப்பதே கனவு என்று நம்பினர்,



Scanned by CamScanner

"கனாக் காண்பது கற்பனை புரிவது
தேடுவது சுழல்வது
பற்றி நிற்பது எண்ண மிடுவது பகுத்தறிவு"[8]

இவ்வாறெல்லாம் இருப்பதுதான் கனவு, மேலும் நினைப்பது, ஆராய்வது, கணிப்பது, தீர்மானம் செய்வது, கனாக் காண்பது, கற்பனை புரிவது போன்றவையும் கனவுகளே என்று பிரேமா அவர்கள் விரிவாகக் கூறியுள்ளார்.

"அணித்தரு புரிகுழல் ஆய் இழை தன்னொரும்
பிணிப்பு அறுத்தோர் - தம் பெற்றி எய்தவும்"[9]

மதுரை நகரிலே மணம் வீசும் கூந்தலை உடைய கண்ணகி நடுங்கி துயர் அடையவும், கோவலன் உடையில்லாமலும், எருமையின் மீது ஊர்ந்து செல்லவும், ஆயிழையாளோடு பிறவிப் பிணியை எய்தவும், தன் மலர்களைக் கீழே எறிந்துவிட்டு காமக்கடவுள் அழவும் நல் இருளில் இத்தகைய கனவைக் கண்டு புகார் நகரினை விட்டு இங்குவந்தேன். கனவு பற்றிய நம்பிக்கையால் பலித்துவிடுமோ என்ற எண்ணத்தில் கோவலன் அச்சப்படுகிறான்.

## தீய குறிப்புகள் பற்றிய நம்பிக்கை

தீய குறிப்புகள் பற்றிய நம்பிக்கைகள் அதிகம் உண்டு, பூனை குறுக்கே வந்தாலும், விதவைப் பெண்ணை எதிரே பார்த்தாலும், ஒற்றைப் பார்ப்பனரைப் பார்த்தாலும் மக்கள் அதனைத் தீய சகுனம் என்று நம்புகின்றனர்.

"தீயவை தீய பயத்தால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்"[10] (குறள்)

தீயை விட தீய சகுனம் கொடுமையானது என்று இப்பாடல் மூலம் தீயவை பற்றிய குறிப்புகளை வள்ளுவர் கூறுகிறார்.

மதுரைக் காண்டத்தில், குடங்களில் உறையிட்டிருந்த பால் உறையாதிருந்தது. பெரிய திமிலை உடைய ஆனேறு கண்ணீர் விட்டது. துள்ளி விளையாடும் ஆட்டுக்குட்டிகள் சோம்பலாயிருந்தன. ஆநிரைகள் தம் உடல் நடுங்க நின்றும் அதன் கழுத்து மணிகள் அற்று நிலத்தில் வீழ்ந்தன. இதைப்போன்ற தீய குறிப்புகள் நடந்தால் துன்பம் நமக்கு வரும் என்று மாதரி தன் மகளிடம் கூறுகின்றாள். இளங்கோவடிகள் இதன் மூலம் ஏதோ துன்பம் வரும் என்று உணர்த்தியுள்ளார்.



Scanned by CamScanner

### குலம் பற்றிய நம்பிக்கை

மக்களிடம் குலம் பற்றிய நம்பிக்கை காணப்படுகிறது. நல்ல கற்புடைய பெண் என்பதால் இவள் என் குலத்தவள் என்று கூறி அக்குல மக்கள் பெருமைப்படுகின்றனர்.

"செயற்கரிய செய்வர் பெரியோர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"[11]

நல்ல செயலை செய்பவர்கள் உயர் குலத்தவர்கள் என்றும், தீய செயலைச் செய்பவர்கள் கீழ்க்குணம் படைத்தவர் என்றும் குலத்தைப் பற்றி வள்ளுவர் கூறுகின்றார். இது போலவே சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் உயர்நிலை எடுத்துரைக்கப்படுகிறது.

"ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த
வேய்வில் எயினர் குலனே குலனும்"[12]

என்று கண்ணகியின் தோற்றத்தைக் கண்டு மதுரை நகரில் உள்ள வேட்டுவ மக்கள் அவளது கொற்றவை நிலையினை இவள் எம் குலத்தவள் என்று எடுத்தியம்பினர். கண்ணகியின் அணிகலன்களைக் கண்டு எயினர் குலத்தினர் என்றும் கூறினர்.

### முடிவுரை

நம்பிக்கை என்பது மனித வாழ்வில் மிக முக்கியமான ஒன்றாகும். உலகில் வாழும் ஒவ்வொருவரும் நம்பிக்கை என்ற ஊன்று கோலினைத் தாங்கிக் கொண்டு தான் வாழ்கின்றனர்.

'சிலப்பதிகாரத்தில் நம்பிக்கைகள்' என்னும் பகுதியில் காலம்காலமாகப் பின்பற்றிய பல்வேறுபட்ட நம்பிக்கைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்நம்பிக்கை வழி.

### அடிக்குறிப்புகள்

1. முனைவர் சி. சேதுராமன், எட்டயபுரத்தாரும், பட்டுக்கோட்டையாரும் ப.222.
2. புலியூர்க் கேசிகன், சிலப்பதிகாரம், ப.78.
3. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.213
4. புலியூர்க் கேசிகன், சிலப்பதிகாரம், மேலது, ப.239.
5. புலியூர்க் கேசிகன், சிலப்பதிகாரம், ப.132
6. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப211.



Scanned by CamScanner

7. புலியூர்க் கேசிகன், சிலப்பதிகாரம், ப.272.
8. ஆர் பிரேமா, பெண் - மரபிலும் இலக்கியத்திலும், ப.113.
9. புலியூர்க் கேசிகன், சிலப்பதிகாரம், ப.272.
10. நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, திருக்குறள் மூலமும் உரையும், ப.42.
11. நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, திருக்குறள் மூலமும் உரையும், ப.76.
12. டாக்டர் எஸ். தருமாம்பாள், வீரத்தமிழன்னை, ப.77.

## துணைநூற்பட்டியல்


| ஆசிரியர் | | நூல்கள் |
|---|---|---|
| புலியூர்க்கேசிகன் | - | சிலப்பதிகாரம்,<br>பாரி நிலையம்,<br>184, பிராட்வே,<br>சென்னை – 8.<br>மு.ப.1985. |
| சக்திவேல்.சு. | - | நாட்டுப்பற இயல் ஆய்வு,<br>பாரி முனை,<br>சென்னை – 108.<br>ஐந்தாம் பதிப்பு.<br>ஜூலை 2005. |
| சேதுராமன் | - | எட்டயபுரத்தாரும் பட்டுக்கோட்டையும்<br>பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்,<br>சென்னை – 14.<br>மு.ப.1998. |
| தருமாம்பாள். எஸ், | - | வீரத்தமிழன்னை,<br>அருள்வேல் அச்சகம்,<br>சென்னை – 14.<br>மு.ப.1999. |
| பிரேமா. ஆர் | - | பெண் மரபிலும் இலக்கியத்திலும்,<br>சென்னை – 17.<br>மு.ப. டிசம்பர். 2001 |




Scanned by CamScanner